புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

# சங்க இலக்கியத்தில் பெண்மையின் மேன்மை

முனைவர். டே. பியூலா,
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
மகளிர் கிறித்தவக் கல்லூரி, நாகர்கோவில் -1,

ஆய்வுச்சுருக்கம்

கருத்து வளமும் கற்பனைச் சிறப்பும் செறிந்த பொருண்மையும் கொண்ட சங்க இலக்கியங்களைத் தமிழர் பண்பாட்டின் பேழை எனலாம். எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் பண்டைத் தமிழரின் பண்பாட்டுக் கூறுகளைப் பத்திரப்படுத்திய கருவூலங்கள்.

“தற்காத்துத் தற்கொண்டாற் பேணி தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்” (திருக்குறள் – 56)

என்று வள்ளுவரால் அடையாளப்படுத்தப்படும் பெண்மையின் மாண்புகள் பலவும் சங்க இலக்கியத்தில் பண்பாட்டுக் கூறுகளாய் பதிவாகியுள்ளன. சங்க இலக்கியத்தில் மென்மையாம் பெண்மையின் மேன்மை பொலிவுறும் தளங்களை இக்கட்டுரையில் நுகர்வோம்.

## கணவரைப் போற்றும் மாண்பு

கற்புடை மகளிர் தம் கணவரைப் போற்றும் மாண்பு பட்டினப்பாலை என்னும் பத்துப்பாட்டு நூலில் பதிவாகியுள்ளது. ஏழு பிறவிகள் எடுப்பினும் தம் கணவரோடு மட்டுமே வாழ வேண்டும் என்பதற்காக சோம குண்டம், சூரிய குண்டம் என்ற இரு ஏரிகளிலும் மூழ்கி காமனை வணங்கியுள்ளனர் என்ற செய்தியினை,

“வரியணிசுடர் வான்பொய்கை
இரு காமத் திணையேரி” (பட்டினப்பாலை – 38-39 வரிகள்)

என்ற பாடல் வரிகளால் அறிய முடிகிறது.

## வீரம் செறிந்த பெண்மை

வீரத்தை முதன்மைப்படுத்தி வாழ்ந்த சமூகத்தில் வீரத்திறன் வாய்க்கப்பெற்ற பெண்மையின் சிறப்பு சங்க இலக்கியத்தில் பண்பாட்டுப் பதிவாய் பத்திரப்படுத்தப்பட்டுள்ளது. வீர மகளிர் “மூதின் மகளிர்” என்ற சிறப்புப் பெயருடன் சங்க இலக்கியத்தில் அடையாளம் காட்டப்படுகின்றனர். மூதின் மகளிர் வீரப் பின்னணியைச் சுட்டும் புறநானூற்றுப் பாடல்களில் வீரத்தின் உச்சம் விளம்பும் பாடலாக 279-வது பாடலைச் சுட்டலாம்.

“கெடுக சிந்தை; கடிது இவள் துணிவே;
மூதில் மகளி ராதல் தகுமே;
மேல்நாள் உற்ற செரவிற்கு இவன் தன்னை
யானை எறிந்து, களத்து ஒழிந்தன்னே;
நெருதல் உற்ற செருவிற்கு இவள் கொழுநன்
பெருநிரை விலங்கி, ஆண்டுப் பட்டவனே;
இன்றும் செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல் கைக்கொடுத்து வெளிது விரித்து உடீஇ
பாறு மயிர்க்குடுமி எண்ணெய் நீவி
ஒரு மகன் அல்லது இல்லோள்

'செருமுகம் நோக்கிச் செல்க' என விடுமே!

என்னும் பாடல் தரும் பொருளாவது; முதல் நாள் போரில் தந்தையை இழக்கிறாள். இரண்டாம் நாள் போரில் கணவனை இழக்கிறாள். மூன்றாம் நாள் போரில் பங்கெடுப்பதற்காக தனக்கிருந்த ஒரே மகனையும் அனுப்பி வைக்கிறாள் என்பதாகும். மென்மையாம் பெண்மையின் வீரத்தின் வேகம் தொன்மையாம் சங்க இலக்கியத்தில் தண்மையாய் பதிவாகியுள்ளமை மகளிரின் வீர மாண்பிற்கு மகுடம்.

விருந்தோம்பலில் சிறந்த பெண்மை

இயற்கையோடு இயைந்த வாழ்வினை இயல்பாய் கொண்ட இல்லற மகளிர் விருந்தோம்பல் என்ற செயல்பாட்டினை முறையாய் செய்து தமிழர் பண்பாட்டிற்கு வளமை சேர்த்தனர். சங்க கால மகளிர் விருந்தோம்பலில் சிறந்து விளங்கிய திறனை,

"அல்லி லாயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின் மெல்லியற் குறுமகள்" (நற்றிணை – 142)

என்ற வரிகள் வெளிப்படுத்துகின்றன. இடையர்குலப் பெண்கள் தயிர் கடைந்து வெண்ணெய் எடுத்து மோரை விற்று கிடைத்த பணத்தில் தங்கம் வாங்கி தன் அங்கம் அலங்கரிப்பதை விடுத்து தன் சுற்றத்தாரைப் போற்றி விருந்தோம்புதல் மேற்கொள்வதற்காக எருமையையும் பசுக்களையும் அவற்றின் கன்றுகளுடன் வாங்கினாள் என்று பெரும்பாணாற்றுப்படை கூறுமிடம் குறிப்பிடத்தக்கது.

"… …….. …….. ……. ……. ……. ….. ஆய்மகள்
அளைவிலை உணவின் இளையுடனருத்தி
நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்
எருமை, நல் ஆன் கருநாகு பெறூஉம்" (பெரும்பாணாற்றுப்படை 162-165 வரிகள்)

என்னும் வரிகள் கண்ணியமாய் விருந்தோம்பல் செய்த பெண்மையைத் திண்ணமாய் எடுத்துரைக்கின்றன.

தொழிலில் பெண்மை

திணைசார் வாழ்வியல் வாழ்ந்த சங்க இலக்கிய காலகட்டத்தில் மகளிர் இல்லறக் கடமை மட்டுமன்றி தொழில் வாய்ப்புகளையும் கடைபிடித்தனர். குறிஞ்சி நிலத்தில் தினை விதைத்த நிலத்தினைக் காவல் புரியும் தொழிலை மகளிர் செய்தனர் என்பதற்கு "புலித்தோல் போர்த்திய பரணின் மீதிருந்து மகளிர் தினைபுனம் காப்பர்" என்று நற்றிணை 351-வது பாடல் சான்று பகர்கிறது. முல்லை நிலத்தில் பொன்னிற மேனியையுடைய ஆய்மகள் மோர் விற்ற நிகழ்வினை,

"உறை அமை தீந்தயில் கலக்கி நுரைதெரிந்து
புகர்வாய்க் குழிசி பூசுமட் டிரீஇ
நாள்மோர் மாறு நன்மா மேனிச்
சிறுகுழை துயல்வரும் காதின் பணைதோள்"

(பெரும்பாணாற்றுப்படை – 158-161 வரிகள்)

என்ற வரிகள் விளக்குகின்றன. மருதநில மகளிர் வயல்களில் நெல்நாற்றை நடவு செய்த நிகழ்வினை முடிநாறழுத்திய நெடுநீர்ச் செரு என்று பெரும்பாணாற்றுப்படை சுட்டுகிறது. பூ விற்கும் தொழில் செய்த பூவையரைக் காட்சிப்படுத்துகிறது நற்றிணை,

"பித்திகை விரவுமலர் கொள்ளி ரோவென
வண்டுசூழ் வட்டியள் திரிதரும்
தண்டலை உழவர் தனிமட மகளே" (நற்றிணை – 97)

உழவன் மகளொருத்தி பித்திகைப் பூக்களைத் தெருவில் கூவி விற்பனை செய்வதை மேற்சொன்ன பாடல் எடுத்துரைக்கிறது.

மேலும், நற்றிணை 118-வது பாடலில் மெல்லி பாதிரி மலரை விற்கும் பெண் பற்றிய பதிவு இடம்பெற்றுள்ளமை சுட்டத்தகுந்தது. நெய்தல் நில மகளிர் மீனை விற்பனை செய்தனர் என்பதை "துதிவேல் நோக்கி நுனை மகள்" என்று குறுந்தொகை 304-வது பாடல் வரி குறிப்பிடுகின்றது. நெய்தல் நிலப்பெண் மீன் விற்பதோடு கடலில் விளைந்த உப்பினையும் பிற நிலங்களுக்குச் சென்று விற்பனை செய்வதை,

"சில்பத வுணவின் கொள்ளை சாற்றிப்

*பல்வெருத் துமணர் பதிபோகு நெடுநெறி''*

*(பெரும்பாணாற்றுப்படை 64-65 வரிகள்)*

*என்று பாடல் வழியாக புலப்படுத்துகின்றது. வளமிழந்த பாலை நிலத்தில் சிறுகுடி தோறும் பழையர் மகளிர் பூவிற்றனர் என்ற செய்தி அகநானூற்றில் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. கலைத்தொழிலில் புலமை மிக்கவர்களாக மகளிர் திகழ்ந்தமைக்கு,*

*''பாடினி மாலை அணிய*
*வாடாத் தாமரை சூட்டுவன் நினக்கே'' (புறநானூறு. 319)*

*என்ற பாடல்வரிகள் சான்று. பெண் கலைஞரான விறலிக்கு பொன்னரிமாலை அணிவித்து சிறப்பித்த செய்தி இப்பாடலில் பேசப்பட்டுள்ளது.*

*பெண்மைக்கு வாய்த்த அரசியல் நுட்பம்*

*மறக்குடி மகளிரின் வீர மாண்பு மட்டுமல்ல; செறிவான அரசியல் நுட்பங்களை தெரிந்தவர்களாக, செயல்படுத்தியவர்களாக சங்க காலப் பெண்கள் வாழ்ந்து பொலிவுற்றனர் என்பதற்கு ஔவையாரின் புறநானூற்றுப் பாடல்களைச் சான்றாகக் கொள்ளலாம். போரினால் ஏற்படும் தீய விளைவுகளைத் தவிர்க்க எம்மிடத்தும் ஒரு வீரன் உள்ளான். அம்மறவன் ஒரு நாளில் எட்டுதேர் செய்யும் தச்சன் ஒரு மாதம் முயன்று செய்த தேர்க்காலுக்கு ஒப்பானவன் (புறநானூறு 87) என்று கூறி தானைமறம் உரைக்குமிடம் கூறத்தகுந்தது. ''என்னையைக் காணா ஊங்கு பொருதும் என்றல் ஓம்புமின்'' (புறநானூறு-88) என்னும் ''பொருநரும் உளரோ? நீ களம் புகினே'' (புறநானூறு -90) என்றும் மன்னர்தம் திறம் வியந்து பாராட்டுதல் போன்று போர் தடுக்கும் அறிவாற்றலை வெளிப்படுத்தியிருக்கும் பான்மை வியக்கத்தக்கது.*

*பெண்மொழி வெளிப்பாடு*

*சங்க இலக்கியத்தில் கவித்துவமிக்க பெண்கள் பலர் இடம் பெற்றுள்ளனர். அவர்களின் கவித்துவ ஆளுமையில் பெண்மொழி வெளிப்படும் இடங்கள் சங்க இலக்கியத்தில் பதிவாகியுள்ளன. போரில் பின்னிட்டு ஓடாத உறுதி மிக்க வீரன் ஒருவனின் உடல் கண்டு அவனை ஈன்ற தாய் சிறப்பிற்குரிய தன் மகளின் மறமாண்பு கண்டு அன்பு மேலிட பகிர்ந்தவையாய்,*

*''சிறப்புடையாளன் மாண்புகண் டருளி*
*வாடுமுலை ஊறிச் சுரந்தன*
*ஓடாப் பூட்கை விடலை தாய்க்கே'' (புறநானூறு-295)*

*என்று ஔவையார் கூறுமிடத்து பெண்மொழி உச்சமாய் தொனிக்கிறது. வெள்ளிவீதியாரின் பாடல் ஒன்றில்,*

*''திதலை அல்குல்என் மாமைக் கவினே'' (குறுந்தொகை-27)*

*என்று சுட்டுமிடத்தில் வரிபடர்ந்தும் மாந்தளிர் போன்ற நிறமுடனும் இருப்பதாக பெண்ணுடலைச் சித்தரிக்குமிடத்து பெண்மொழி வெளிப்பாட்டைக் காண முடிகிறது.*

*வறுமையிலும் வற்றாத அன்புடைய பெண்மை*

*செல்வச் செழிப்பு வாய்ந்த வீட்டில் வளர்ந்த தலைமகள் அன்பினால் தலைவனுடன் உடன்போக்குத் திருமணம் நிகழ்த்தினாள். வறுமையுற்ற வாழ்வியலைத் தலைவனுடன் இணைந்து எதிர்கொள்கிறாள். இல்லறச் சிறப்பினைத் தாயிடம் உரைக்குமிடத்து,*

*''அன்னாய் வாழி வேண்டு அன்னை நம் படப்பைத்*
*தேன்மயங்கு பாலினும் இனிய –அவர்நாட்டு*
*உவலைக் கூவற் கீழ்*
*மான் உண்டு எஞ்சிய கலுழி நீரே'' (ஐங்குறுநூறு 203)*

*என்று கூறுகிறாள் தலைவி. இல்லற மாண்பின் இன்பத்தை வறுமை சிதைக்க விடுவதில்லை என்ற கண்ணியமிக்க வாழ்வியலறத்தை பெண்மை வெளிப்படுத்துவதை இப்பாடலினூடே நாம் நுகர முடிகிறது.*

*மென்மை என்னும் மேன்மை வாய்த்த பெண்மை*

*சங்க இலக்கியப் பாடல்கள் பலவும் பெண்மையை மென்மை என்றே அடையாளப்படுத்துகின்றன. கலித்தொகையில் பொருள்வயின் பிரிந்து செல்ல இருக்கும் தலைவன் தலைவியிடம்,*

*"எல்வளை எம்மொடு நீவரின் யாழநின்*
*மெல்இயல் மவந்த சீறடி, தாமரை*
*அல்லிசேர் ஆய்இதழ் அரக்குத் தோய்ந்தவை போல*
*கல்உறின் அவ்வடி கறுக்குந அல்லவோ*
*நலம்பெறு சுடர்நுதால் எம்மொடு நீவரின்*
*இலங்குமாண் அவிர்தூவி அன்னமென் சேக்கையுள்*
*தூங்குமான் மேல் ஊர்தித் துயில் ஏற்பாய் மற்று ஆண்டை*
*விலங்குமான் குரல் கேட்பின் வெருவுவை அல்லையோ?"*

*(கலித்தொகை –பாலைக்கலி-13)*

*என்று சொல்லுமிடத்தில் பெண்மையின் இயல்பே மென்மை என்பதை அழுத்தமாகப் பதிவு செய்துள்ளமையினைக் காண முடிகிறது.*

*அஞ்சாமை உடைய பெண்மை*

*அச்சம் இல்லாத பெண்மையின் வெளிப்பாட்டினையும் சங்கப் பனுவல்கள் முன் வைக்கத் தவறவில்லை. சான்றாக, பரிசில் அளிக்கத் தாமதம் செய்த அதியமானின் வாயில் காவலாளனிடம் அவனது செயல் குறித்து*

*"மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்*
*மழுவுடைக் காட்டகத்து அற்றே*
*எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே" (புறநானூறு-206)*

*என ஔவையார் உரைக்குமிடத்தில் அச்சமில்லாத பெண்மை வெளிப்படுவதைக் காணலாம்.*

*முடிவுரை*

*பெண்மையின் மேன்மைகளைப் பட்டியலிடும் சங்க இலக்கியங்கள் ஆண் மேலாண்மையினை அதிகமாகப் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மென்மையாய் பெண்மையைப் படைத்து மூளையின் ஆற்றலைப் பயன்படுத்தும் முழு சுதந்திரத்தினைத் தான் சார்ந்திருக்கும் ஆண் தீர்மானிக்கும் தன்மையிலான பதிவுகள் பலவற்றை வெளிப்படையாகவே சங்க இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன என்பது மறுக்க இயலாத உண்மை. தமிழ் இலக்கிய வரலாற்றின் தொடக்க கால இலக்கியமான சங்க இலக்கிய கால பெண்மையின் மேன்மைகள் ஆண் சார்பு நிலையினால் வண்ணமிடப்பட்டவை. நீரைப் பருகுவது போல், காற்றைச் சுவாசிப்பது போல் அறிவை நுகர்வதற்கும் ஆற்றலை முயற்சிகளை மேற்கொள்வதற்குமான சம வாய்ப்பினை மேன்மை பொருந்திய பெண்மை பெறுவது சமூகத்தேவை! பெண்மையின் மேன்மைக்கு அதுவே தேவை!*

*துணைநூற்பட்டியல்*


1. *திருக்குறள், பரிமேலழகர் உரை, சாரதா பதிப்பகம்.*
2. *பட்டினப்பாலை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.*
3. *புறநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.*
4. *நற்றிணை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.*
5. *பெரும்பாணாற்றுப்படை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.*
6. *ஐங்குறுநூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.*
7. *கலித்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.*
8. *அன்னித்தாமசு, சங்க காலப் பெண்மை, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.*
9. *பெருமாள்சாமி, வெ., சங்ககாலத் தமிழரின் சமூகநிலை,*
   *பாரி புத்தகாலயம், சென்னை.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********